


# THAJWEED-UL-QURAN BOOK

## KALUTARA AHADIYA SCHOOL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FAYIQ

بسم الله الرحمن الرحيم

## அறபு எழுத்துக்கள் 29

| | | |
|---|---|---|
| ا - اَلْاَلِفُ - اَلِفٌ | ب - اَلْبَاءُ - بَاءٌ | ت - اَلتَّاءُ - تَاءٌ |
| ث - اَلثَّاءُ - ثَاءٌ | ج - اَلْجِيْمُ - جِيْمٌ | ح - اَلْحَاءُ - حَاءٌ |
| خ - اَلْخَاءُ - خَاءٌ | د - اَلدَّالُ - دَالٌ | ذ - اَلذَّالُ - ذَالٌ |
| ر - اَلرَّاءُ - رَاءٌ | ز - اَلزَّاءُ - زَاءٌ | س - اَلسِّيْنُ - سِيْنٌ |
| ش - اَلشِّيْنُ - شِيْنٌ | ص - اَلصَّادُ - صَادٌ | ض - اَلضَّادُ - ضَادٌ |
| ط - اَلطَّاءُ - طَاءٌ | ظ - اَلظَّاءُ - ظَاءٌ | ع - اَلْعَيْنُ - عَيْنٌ |
| غ - اَلْغَيْنُ - غَيْنٌ | ف - اَلْفَاءُ - فَاءٌ | ق - اَلْقَافُ - قَافٌ |
| ك - اَلْكَافُ - كَافٌ | ل - اَللَّامُ - لَامٌ | م - اَلْمِيْمُ - مِيْمٌ |
| ن - اَلنُّوْنُ - نُوْنٌ | و - اَلْوَاوُ - وَاوٌ | ه - اَلْهَاءُ - هَاءٌ |
| ء - اَلْهَمْزَةُ - هَمْزٌ | ي - اَلْيَاءُ - يَاءٌ | |

## அறபு எழுத்துக்களின் பாடல்

اَلِفٌ بَاءٌ تَاءٌ ثَاءٌ * جِيْمٌ حَاءٌ خَاءٌ خَيْرٌ

دَالٌ ذَالٌ رَاءٌ زَاءٌ * سِيْنٌ شِيْنٌ صَادٌ ضَادٌ

طَاءٌ ظَاءٌ عَيْنٌ غَيْنٌ * فَاءٌ قَافٌ كَافٌ لَامٌ

مِيْمٌ نُوْنٌ وَاوٌ هَاءٌ * هَمْزٌ يَاءٌ تَمَّ الْكُلُّ



KALUTARA AHADIYA SCHOOL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்குர்ஆன் ஓதும் முறைகள் 3

1. اَلتَّرْتِيْلُ தஜ்வீத் சட்டங்களைக் கவனித்து ஆறுதலாக குர்ஆனை ஓதுவதற்குச் சொல்லப்படும்.

2. اَلْحَدْرُ தஜ்வீத் சட்டங்களைக் கவனித்து விரைவாக குர்ஆனை ஓதுவதற்குச் சொல்லப்படும்.

3. اَلتَّدْوِيْرُ தஜ்வீத் சட்டங்களைக் கவனித்து நடுத்தரமாக குர்ஆனை ஓதுவதற்குச் சொல்லப்படும்.

## தஜ்வீத் வினா - விடை

1. சுக்கூன் செய்யப்பட்ட நூன், தன்வீனுடைய சட்டங்கள் எத்தனை? எவை?

நாலு, (1) اَلْاِظْهَارُ (2) اَلْاِخْفَاءُ (3) اَلْاِدْغَامُ (4) اَلْاِقْلَابُ

2. الاظهار என்றால் என்ன?

الاظهار என்றால் வெளியாக்கல் அதாவது:- சுக்கூன் செய்யப்பட்ட நூன் அல்லது தன்வீனுக்குப் பின்னால் اظهار உடைய ஹர்புகளில் ஒன்று வந்தால் சுக்கூன் செய்யப்பட்ட நூனை அல்லது தன்வீனை வெளியாக்கி غنّة இராகம் இல்லாமல் ஓதுவதற்கு اظهار என்று சொல்லப்படும்.

اظهار உடைய ஹர்புகள் ஆறு அவையாவன:-

خ - غ - ح - ع - ه - ء



KALUTARA AHADIYA SCHOOL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. اظهار உடைய ஹர்புகளை வேறு எப்பெயர் கொண்டு அழைக்கலாம்?

حَلْقٌ உடைய ஹர்புகள் என அழைக்கப்படும்.
(حلق - தொண்டை )

4. ஹல்குடைய ஹர்புகளை உள்ளடக்கிய அரபிய பாடலைக் கூறுக?

حُرُوْفُ حَلْقٍ سِتَّةٌ هَمْزٌ وَهَا * عَيْنٌ وَحَاءٌ ثُمَّ غَيْنٌ ثُمَّ خَا

மேலும் اظهار உடைய ஹர்புகளை உள்ளடக்கி பின்வரும் பாடலைக் கூறலாம்

أَخِيْ هَاكَ عِلْماً حَازَهُ غَيْرُ خَاسِرٍ

5. தொண்டை உடைய ஹர்பு வெளியாகும் முறையைக் கூறுக?

| | |
|---|---|
| ء – ه | அடித்தொண்டை |
| ع – ح | நடுத்தொண்டை |
| غ – خ | மேற்தொண்டை |

6. غنة என்றால் என்ன?

மூக்கினால் ஏற்படும் இராகம்

7. தன்வீன் என்றால் என்ன?

எழுத்தில் வராமல் மொழித்தலில் வரக்கூடிய சுக்கூன் செய்யப்பட்ட நூனுக்குச்சொல்லப்படும். இது - فَتْحَتَيْنِ ضَمَّتَيْنِ - كَسْرَتَيْنِ இல் இடம்பெறும் ( ـٌ ـٍ ـً )

KALUTARA AHADIYA SCHOOL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. اظهار உடைய 6 ஹுர்புகளுக்கும் உதாரணம் தருக?

| | | | | |
|---|---|---|---|---|
| ء | = | مَنْ اٰمَنَ | - | رَسُوْلٌ اَمِيْنٌ |
| ه | = | يَنْهَوْنَ | - | جُرُفٍ هَارٍ |
| ع | = | مِنْ عِلْمٍ | - | سَمِيْعٌ عَلِيْمٌ |
| ح | = | يَنْحِتُوْنَ | - | عَلِيْمٌ حَكِيْمٌ |
| غ | = | مِنْ غِلٍّ | - | عَزِيْزٌ غَفُوْرٌ |
| خ | = | مِنْ خَيْرٍ | - | قَوْمٌ خَصِمُوْنَ |

9. الاخفاء என்றால் என்ன?

الاخفاء என்றால் மறைத்தல் அதாவது:-
சுக்கூன் செய்யப்பட்ட நூன் அல்லது தன்வீனுக்குப் பின்னால் اخفاء உடைய ஹுர்புகளில் ஒன்று வந்தால் சுக்கூன் செய்யப்பட்ட நூன் அல்லது தன்வீனை اخفاء உடைய ஹுர்பில் மறைத்து غنة வுடன் ஓதுவதற்கு الاخفاء என்று சொல்லப்படும்.

اخفاء உடைய ஹுர்புகள் 15 அவையாவன:-

ت - ث - ج - د - ذ - ز - س - ش - ص - ض - ط - ظ - ف - ق - ك

10. الاخفاء உடைய ஹுர்புகளை உள்ளடக்கிய பாடலை (بيت) ஐ கூறுக?

صِفْ ذَا ثَنَا كَمْ جَادَ شَخْصٌ قَدْ سَمَا

دُمْ طَيِّباً زِدْ فِيْ تُقًى ضَعْ ظَالِماً





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. اخفاء உடைய 15 ஹர்புகளுக்கும் உதாரணம் தருக?

| | | | | |
|---|---|---|---|---|
| ت | = | مِنْ تَحْتِهَا | – | نَارًا تَلَظّٰى |
| ث | = | فَاَمَّا مَنْ ثَقُلَتْ | – | قَوْلًا ثَقِيْلًا |
| ج | = | مِنْ جُوْعٍ | – | حُبًّا جَمًّا |
| د | = | مَنْ دَسّٰهَا | – | وَلِكُلٍّ دَرَجَاتٌ |
| ذ | = | فَاَنْذَرْتُكُمْ | – | فَاعِلٌ ذٰلِكَ |
| ز | = | اَنْزَلْنَاهُ | – | غُلَامًا زَكِيًّا |
| س | = | مِنْ سِجِّيْلٍ | – | لَيَالٍ سَوِيًّا |
| ش | = | مِنْ شَرِّ | – | نَفْسٌ شَيْئًا |
| ص | = | عَنْ صَلَاتِهِمْ | – | صَفًّا صَفًّا |
| ض | = | مِنْ ضَرِيْعٍ | – | مَعِيْشَةً ضَنْكًا |
| ط | = | وَمَا يَنْطِقُ | – | بَلْدَةٌ طَيِّبَةٌ |
| ظ | = | يَنْظُرُوْنَ | – | نَفْسٍ ظَلَمَتْ |
| ف | = | اَلْمَنْفُوْشِ | – | سُبُلًا فِجَاجًا |
| ق | = | اَنْقَضَ | – | شَيْءٍ قَدِيْرٌ |
| ك | = | مِنْكُمْ | – | قَوْلًا كَرِيْمًا |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. الاقلاب என்றால் என்ன?

الاقلاب என்றால் புரட்டல். அதாவது:- சுகூன் செய்யப்பட்ட நூன் அல்லது தன்வீனுக்குப் பின்னால் الاقلاب உடைய ஹர்பாகிய ب வந்தால் சுக்கூன் செய்யப்பட்ட நூனை அல்லது தன்வீனை م ஆகப் புரட்டி غنة வுடன் ஓதுவதற்கு الاقلاب என்று சொல்லப்படும்.

உதாரணம்:- مِنْ بَعْدِ - اَبَدًا بِمَا

13. الادغام என்றால் என்ன?

الادغام என்றால் நுழைத்தல் அதாவது:- சுகூன் செய்யப்பட்ட நூன் அல்லது தன்வீனுக்குப் பின்னால் الإدغام உடைய ஹர்புகளில் ஒன்று வந்தால் சுகூன் செய்யப்பட்ட நூனை அல்லது தன்வீனை الادغام உடைய ஹர்பைப்போல் மாற்றியபின் الادغام உடைய ஹர்பில் நுழைத்து ஒரே ஹர்பைப்போல் ஷத்து வைத்து ஓதுவதற்கு الادغام என்று சொல்லப்படும். الادغام உடைய ஹர்புகள் - 6.

அவையாவன:- ي – ر – م – ل – و – ن

يَرْمَلُوْنَ என்னும் சொல் இந்த ஹர்புகளை உள்ளடக்கும்.

14. சுகூன் செய்யப்பட்ட நூன், தன்வீனுடைய பாடத்தில் ادغام எத்தனை வகைப்படும்? எவை?

இரண்டு வகைப்படும்,

1வது اَلْاِدْغَامُ بِالْغُنَّةِ (உன்னாவுடன் இத்ஆம் செய்தல்)

2வது اَلْاِدْغَامُ بِلَاغُنَّةٍ (உன்னா இல்லாமல் இத்ஆம் செய்தல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. உன்னாவுடன் இத்ஆம் செய்யக்கூடிய ஹர்புகள் எத்தனை? எவை? அவைகளை உள்ளடக்கும் சொல் எது?

நாலு ي — ن — م - و

يَنْمُوْ என்னும் சொல்

16. உன்னா இல்லாமல் இத்ஆம் செய்யக்கூடிய ஹர்புகள் எத்தனை? எவை?

இரண்டு ر — ل

17. الادغام بالغنة க்கு வேறு பெயர் என்ன?

اِدْغَامُ نَاقِصٌ ( ناقص குறைந்தது)

18. اَلْاِدْغَامُ بِلَاغُنَّة க்கு வேறு பெயர் என்ன?

اِدْغَامٌ تَامٌّ (تَامٌّ நிரப்பமானது)

19. குறைந்த غنة வுடன் இத்ஆமும் செய்யக்கூடிய ஹர்புகள் எவை? அந்த غنة ஐ எவ்வாறு அழைக்கப்படும்?

و — ي غُنَّةٌ خَفِيَّةٌ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. ادغام உடைய 6 ஹர்புகளுக்கும் உதாரணம் தருக.

ي = اَنْ يَّقُوْلُوْا - لِقَوْمٍ يُّؤْمِنُوْنَ

ر = مِنْ رَّبِّهِمْ - غَفُوْرٌ رَّحِيْمٌ

م = مِنْ مَّلْجَاٍ - هُدًى مِّنْ رَّبِّهِمْ

ل = يُبَيِّنْ لَّنَا - هُدًى لِّلْمُتَّقِيْنَ

و = مِنْ وَّرَائِهِمْ - هُدًى وَّرَحْمَةٌ

ن = اِنْ نَّقُوْلُ - حِطَّةٌ نَّغْفِرْ

21. பொதுவாக ادغام என்றால் என்ன?

இரு எழுத்துக்கள் ஒரே எழுத்தாய் வந்து முந்தின எழுத்துக்கு சுகூனும் இரண்டாம் எழுத்துக்கு ஹரகத்தும் இருந்தால் முந்தின எழுத்தை இரண்டாம் எழுத்தில் நுழைத்து ஷத்து செய்து ஒரே ஹர்பைப்போல் ஓதுவதற்கு ادغام என்று சொல்லப்படும்.

உதாரணம் :- اِذْ ذَّهَبَ

22. ادغام இன் வகைகள் எத்தனை? எவை?

மூன்று

1வது اِدْغَامُ الْمُتَمَاثِلَيْنِ (ஒப்பமானது)

2வது اِدْغَامُ الْمُتَقَارِبَيْنِ (சமீபமானது)

3வது اِدْغَامُ الْمُتَجَانِسَيْنِ (இனமானது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. ادغام المتماثلين என்றால் என்ன? உதாரணம் தருக.

இரு எழுத்துக்கள் ஒரே எழுத்தாய் வந்து ادغام செய்வதற்குச் சொல்லப்படும்.

உதாரணம்:- اِذْ ذَّهَبَ - اِضْرِبْ بِّعَصَاكَ - بَلْ لَّا يَخَافُوْنَ - قَدْ دَّخَلُوْا

24. ادغام المتقاربين என்றால் என்ன?

எழுத்தில் வேறுபட்டும் பிறப்பிடத்தில் (مَخْرَجْ யில்) சமீபித்தும் வந்த இரு எழுத்துக்களை ادغام செய்வதற்குச் சொல்லப்படும்.

25. எத்தனை இடங்களில் ادغام المتقاربين இடம்பெறும்? உதாரணம் தருக.

இரண்டு இடங்களில்,

1வது ق ஐ ك யில் இத்ஆம் செய்தல்.

உதாரணம்:- اَلَمْ نَخْلُقْكُّمْ

2வது ل ஐ ر யில் இத்ஆம் செய்தல்.

உதாரணம்:- قُلْ رَّبِّ

26. ادغام المتجانسين என்றால் என்ன?

எழுத்தில் வேறுபட்டும் பிறப்பிடத்தில் ஒன்றாகவும் வந்த இரு எழுத்துக்களை ادغام செய்வதற்குச் சொல்லப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. எத்தனை இடங்களில் ادغام المتجانسين இடம்பெறும்? உதாரணம் தருக.

ஏழு இடங்களில்,

1வது ط ஐ ت இல் ادغام செய்தல்.

உதாரணம்:- لَئِنْ بَسَطْتَّ

2வது ت ஐ ط இல் ادغام செய்தல்.

உதாரணம்:- وَقَالَتْ طَّائِفَةٌ

3வது ت ஐ د இல் ادغام செய்தல்.

உதாரணம்:- أَثْقَلَتْ دَّعَوَا اللّٰهَ

4வது د ஐ ت இல் ادغام செய்தல்.

உதாரணம்:- وَقَدْ تَّبَيَّنَ

5வது ذ ஐ ظ இல் ادغام செய்தல்.

உதாரணம்:- إِذْ ظَّلَمُوٓا

6வது ب ஐ م இல் ادغام செய்தல்.

உதாரணம்:- يَابُنَيَّ ارْكَبْ مَّعَنَا

7வது ث ஐ ذ இல் ادغام செய்தல்.

உதாரணம்:- يَلْهَثْ ذَّلِكَ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. சுகூன் செய்யப்பட்ட م யின் சட்டங்கள் எத்தனை? எவை?

மூன்று,

1வது. اَلْإِدْغَامُ الشَّفَوِيُّ

2வது اَلْإِخْفَاءُ الشَّفَوِيُّ

3வது اَلْإِظْهَارُ الشَّفَوِيُّ

மேலும் 3ம் பிரிவில் اَلْإِظْهَارُ الشَّفَوِيُّ الشَّدِيْدُ என்று ஒரு பிரிவும் உண்டு (شديد கடுமையானது)

29. الادغام الشفوي என்றால் என்ன?

சுகூன் செய்யப்பட்ட م க்கு பின்னால் ஹரகத்து செய்யப்பட்ட م வந்தால் முந்தின م ஐ இரண்டாவது م யில் நுழைத்து உன்னாவுடன் ஓதுவதற்கு الادغام الشفوي என்று சொல்லப்படும்.
ادغام الميم என்றும் அதனை அழைக்கலாம்.

உதாரணம்:- لَهُمْ مَّثَلاً وَلَكُمْ مَّا فِى الْأَرْضِ

30. الاخفاء الشفوي என்றால் என்ன?

சுகூன் செய்யப்பட்ட م க்கு பின்னால் ب வந்தால் م ஐ ب யில் மறைத்து உன்னாவுடன் ஓதுவதற்கு الاخفاء الشفوي என்று சொல்லப்படும். اخفاء الميم என்றும் இதனை அழைக்கலாம்.

உதாரணம்:- تَرْمِيْهِمْ بِحِجَارَةٍ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. الاظهار الشفوي என்றால் என்ன?

சுகூன் செய்யப்பட்ட م க்கு பின்னால் ب م ஆகிய இரு எழுத்துக்களைத் தவிர ஏனைய 26 எழுத்துக்களில் ஒன்று வந்தால் م ஐ வெளியாக்கி غنة இல்லாமல் ஓதுவதற்கு الاظهار الشفوي என்று சொல்லப்படும். اظهار الميم என்றும் இதனை அழைக்கலாம்.

உதாரணம்:- اَلَمْ نَشْرَحْ

32. الاظهار الشفوي الشديد என்றால் என்ன?

சுகூன் செய்யப்பட்ட م க்கு பின்னால் ف அல்லது و இடம்பெற்றால் م ஐக் கடுமையாக வெளியாக்கி غنة இல்லாமல் ஓதுவதற்குச் சொல்லப்படும்.

உதாரணம்:- وَهُمْ فِيْهَا – عَلَيْهِمْ وَلَا الضَّالِّيْنَ

33. شَفَوِيٌّ என்றால் என்ன?

உதடு சம்மந்தமானது என்பது கருத்து. م உடைய مخرج உதடாக இருப்பதால் அப்பெயர் வந்தது.

34. مُعَرِّفَةٌ ஆன اَلْ இல் உள்ள ل இன் சட்டங்கள் எத்தனை? அவை எவை?

இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 வது اَللَّامُ الْقَمَرِيَّةُ (சந்திரன் قَمَرٌ )

2 வது اَللَّامُ الشَّمْسِيَّةُ (சூரியன் شَمَسٌ )

(குறிப்பாக்கி வைக்கக்கூடியது مَعْرِفَةٌ)

35. اللام القمرية என்றால் என்ன?

(اَلْقَمَرُ இல் வந்தது போல் ) ال இல் உள்ள ل க்கு சுகூன் வந்தால் اللام القمرية என்று சொல்லப்படும்.

உதாரணம்:- اَلْقَمَرُ - اَلْبَرَكَةُ - اَلْجَنَّةُ

36. اللام الشمسية என்றால் என்ன?

( اَلشَّمْسُ இல் வந்தது போல் ) ل க்கு அடுத்த எழுத்துக்கு ஷத்து வந்தால் اللام الشمسية என்று சொல்லப்படும்.

உதாரணம்:- اَلشَّمْسُ - اَلنُّوْرُ - اَلثَّوَابُ

37. اللام القمرية க்குரிய எழுத்துக்கள் எத்தனை? அவை எவை?

14 ء - ه - ع - ح - غ - خ - و - ي - ف - ق - ك - ب - م - ج

38. اللام الشمسية க்குரிய எழுத்துக்கள் எத்தனை? அவை எவை?

14 ت - ث - د - ذ - ر - ز - س - ش - ص - ض - ط - ظ - ل - ن



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. اللام القمرية வுக்குரிய எழுத்துக்கள் என்றால் என்ன?

اللام القمرية வுடைய ل க்குப் பின்னால் வரும் எழுத்துக்களாகும்.

40. اللام الشمسية வுக்குரிய எழுத்துக்கள் என்றால் என்ன?

اللام الشمسية வுடைய ل க்குப் பின்னால் வரும் எழுத்துக்களாகும்.

41. قَلْقَلَة என்றால் என்ன?

கலக்கி ஓதுதல்.

42 قلقلة வுடைய எழுத்துக்கள் எத்தனை? அவை எவை? அவைகளை உள்ளடக்கும் சொல் எது?

5 ق – ط – ب – ج – د

قُطُبُ جَدٍ

43. قلقلة யின் வகைகள் எத்தனை? எவை?

இரண்டு

1வது قَلْقَلَة صُغْرٰى ( சிறியது صغرى )

2வது قَلْقَلَة كُبْرٰى (பெரியது كبرى )





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. قلقلة صغرى என்றால் என்ன?

ஒரு சொல்லின் நடுவில் قلقلة வுடைய எழுத்துக்கு சுகூன் இடம்பெற்று கலக்கி ஓதுவதற்குச் சொல்லப்படும்.

உதாரணம்:- يَقْطَعُوْنَ - يَطْمَئِنَّ

45. قلقلة كبرى என்றால் என்ன?

ஒரு சொல்லின் கடைசியில் قلقلة வுடைய எழுத்து இடம்பெற்று நிறுத்துவதற்காக வேண்டி சுகூன் வைத்து கலக்கி ஓதுவதற்குச் சொல்லப்படும்.

உதாரணம்:- اَحَدْ - خَلَّاقْ - صِرَاطْ - حَقّْ

46. اِسْتِعْلَاءٌ என்றால் என்ன?

உச்சரிப்பு உயர்ந்து வரல்.

47. استعلاء வுடைய ஹர்புகள் எத்தனை? அவை எவை? அவைகளை உள்ளடக்கும் வாக்கியம் எது?

ஏழு خ - ص - ض - غ - ط - ق - ظ

خُصَّ ضَغْطٍ قِظْ

48. ر இன் சட்டங்கள் எத்தனை? எவை?

மூன்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1வது تَفْخِيْمُ الرَّاءِ ( ر ஐ வல்லினமாக ஓதுதல் )

2வது تَرْقِيْقُ الرَّاءِ ( ر ஐ மெல்லின்மாக ஓதுதல் )

3வது ر ஐ வல்லினமாக அல்லது மெல்லினமாக ஓதுதல்.

49. ر ஐ எத்தனை இடங்களில் வல்லினமாக ஓத வேண்டும்?

ஐந்து இடங்களில்

1வது ر க்கு பத்ஹத்து அல்லது ழும்மத்து வரும்போது,

உதாரணம்:- رَبَّنَا - رُزِقْنَا

2வது ر க்கு சுகூனும் ر க்கு முந்திய எழுத்துக்கு பத்ஹத்து அல்லது ழும்மத்து வரும்போது,

உதாரணம்:- بَرْقٌ - قُرْاٰنٌ

3வது ر க்கு சுகூனும் ر க்கு முந்திய எழுத்துக்கு இடையூறான கஸ்றத்தும் வரும்போது (அதாவது வஸ்லுடைய ஹம்ஸுக்கு கஸ்றத்து வரும்போது)

உதாரணம்:- اِرْجِعُوْا

4வது ر க்கு சுகூனும் ر க்கு முந்திய எழுத்துக்கு நிரந்தரமான கஸ்றத்தும், ر க்கு பிந்திய எழுத்து استعلاء வுடைய எழுத்தாகவும் வரும்போது,

உதாரணம்:- قِرْطَاسٌ - مِرْصَادٌ - فِرْقَةٌ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5வது ر க்கு சுகூனும் ر க்கு முந்திய எழுத்துக்கு சுகூனும் அதற்கு முந்திய எழுத்துக்கு பத்ஹத்து அல்லது ழும்மத்து வரும்போது,

உதாரணம்:- قَصْرٌ – مِصْرٌ

50. ر ஐ எத்தனை இடங்களில் மெல்லினமாக ஓத வேண்டும்?

4 இடங்களில்

1வது ر க்கு கஸ்றத்து வரும்போது,

உதாரணம்:- رِزْقًا – وَالْفَجْرِ – أَرِنَا – رِجَالٌ

2வது ر க்கு சுகூனும், ر க்கு முந்திய எழுத்து சுகூன் செய்யப்பட்ட ي ஆகவும் வரும்போது,

உதாரணம்:- قَيْرٌ – خَيْرٌ

3வது ر க்கு சுகூனும், ر க்கு முந்திய எழுத்துக்கு சுகூனும், அதற்கு முந்திய எழுத்துக்கு கஸ்றத்தும் வரும்போது,

உதாரணம்:- حِجْرٌ – سِحْرٌ

4வது ر க்கு சுகூனும், ر க்கு முந்திய எழுத்துக்கு நிரந்தரமான கஸ்றத்தும், ر க்கு பிந்திய. எழுத்து استعلاء வுடைய எழுத்தாக இல்லாமல் வேறு எழுத்தாகவும் வரும்போது,

உதாரணம்:- فِرْعَوْنَ – فِرْدَوْسَ – مِرْيَةٌ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. எத்தனை இடங்களில் ر ஐ வல்லினமாக அல்லது மெல்லினமாக ஓத வேண்டும்?

இரண்டு இடங்களில்

1வது :- ر க்கு சுகூனும், ر க்கு முந்திய எழுத்துக்கு நிரந்தரமான கஸ்றத்தும், ر க்கு பிந்திய எழுத்து கஸ்றதைன் செய்யப்பட்ட استعلاء வுடைய எழுத்தாகவும் வரும்போது,

உதாரணம்:- فِرْقٍ

2வது :- ر க்கு சுகூனும், ر க்கு முந்திய எழுத்து சுகூன் செய்யப்பட்ட استعلاء வுடைய எழுத்தாகவும் அதற்கு முந்திய எழுத்துக்கு கஸ்றத்தும் வரும்போது,

உதாரணம்:- مِصْرْ - قِطْرْ

52. اظهار விலக்கப்பட்ட சொற்கள் எத்தனை? அவை எவை? ஏன் விலக்கப்பட்டது?

நாலு دُنْيَا - قِنْوَانٌ - صِنْوَانٌ - بُنْيَانٌ

ஓரே கலிமாவில் சுகூன் செய்யப்பட்ட நூனும் இத்ஆமுடைய ஹர்பும் வந்தபடியால்

53. ஷத்து செய்யப்பட்ட م இலும் ஷத்து செய்யப்பட்ட ن இலும் உள்ள தஜ்வீத் சட்டம் என்ன?

غنة تَامّة உதாரணம்:- عَمَّ - إِنَّ



KALUTARA AHADIYA SCHOOL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. مَدّ என்றால் என்ன?

நீட்டி ஓதுவதற்குச் சொல்லப்படும்.

55. மத்துடைய ஹர்புகள் எத்தனை? அவை எவை?

மூன்று ا – و – ي

56. மத்து எத்தனை வகைப்படும்? அவை எவை?

இரண்டு

1வது اَلْمَدُّ الْأَصْلِيُّ ( அடிப்படையான மத்து ).

இதனை اَلْمَدُّ الطَّبِيعِيُّ ( இயற்கையான மத்து ) என்றும் கூறப்படும்.

2வது اَلْمَدُّ الْفَرْعِيُّ ( பிரிந்த மத்து )

57. மத்துடைய அள்வை எவ்வாறு கணிக்கப்படும்?

ஒரு அலிபு, இரு ஹறகத்துகள் என கணிக்கப்படும்.

58. இரண்டு ஹறகத்துகள் என்றால் என்ன?

சாதாரணமாக ஒரு விரலை மடக்கி விரிக்கும் நேரமாகும்.
( حَرَكَة அசைவு )





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. المد الأصلي இன் அளவு என்ன?

இரு ஹறகத்துகளுக்கு நீட்ட வேண்டும்.

60. المد الأصلي என்றால் என்ன?

மத்துடைய ஹர்புகள் மாத்திரம் தனித்து வருவதற்குச் சொல்லப்படும். அதாவது, அலிபுக்கு சுகூனும், அலிபுக்கு முந்திய எழுத்துக்கு பத்ஹத்தும் வாவுக்கு சுகூனும் வாவுக்கு முந்திய எழுத்துக்கு ழும்மத்தும் யேக்கு சுகூனு யேக்கு முந்திய எழுத்துக்கு கஸ்றத்தும் வரவேண்டும்.

61. المد الأصلي க்கு உதாரணம் தருக.

قَالَ - يَقُوْلُ - قِيْلَ

62. المد الأصلي உடைய மூன்று ஹர்புகளையும் உள்ளடக்கி திருமறை வசனம் ஒன்று கூறுக.

نُوْحِيْهَا

63. اَلْمَدُّ الْفَرْعِيُّ எத்தனை வகைப்படும்? எவை?

13 வகைப்படும்.

1வது اَلْمَدُّ الْمُتَّصِلُ ( சேர்ந்தது )
இதை اَلْمَدُّ الْوَاجِبُ என்றும் சொல்லப்படும்.
( واجب கட்டாயமானது )





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2வது اَلْمَدُّ الْمُنْفَصِلُ ( منفصل பிரிந்தது )
இதனை المد الجائز என்றும் சொல்லப்படும்.
( جائز ஆகுமானது )

3வது اَلْمَدُّ الْعَارِضُ لِلسُّكُوْنِ
( عارض இடையூறானது )

4வது المد البدل ( بدل பிரதி)

5வது اَلْمَدُّ الْعِوَضُ ( عوض பகரமானது )

6வது اَلْمَدُّ اللِّيْنُ ( لين மிருதுவானது )

7வது اَلْمَدُّ الصِّلَةَ ( صلة சேர்த்தல் )

8வது اَلْمَدُّ الْفَرْقُ ( فرق வித்தியாசம் )

9வது اَلْمَدُّ التَّمْكِيْنُ ( تمكين இடம்பாடு )

10வது اَلْمَدُّ اللاَّزِمُ الْكَلِمِيُّ الْمُثَقَّلُ ( مثقل கனமாக்கப்பட்டது,
ஸத்து செய்யப்பட்டது ) ( لازم அவசியம் )

11வது اَلْمَدَّ اللاَّزِمُ الْكَلِمِيُّ الْمُخَفَّفُ
( مخفف இலேசாக்கப்பட்டது, சுகூன் செய்யப்பட்டது)

12வது اَلْمَدُّ اللاَّزِمُ الْحَرْفِيُّ الْمُثَقَّلُ
(حرفى அட்சரம்)

13வது اَلْمَدُّ اللاَّزِمُ الْحَرْفِيُّ الْمُخَفَّفُ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64. المد المتصل என்றால் என்ன?

ஒரே கலிமாவில் மத்துடைய ஹர்புக்கு பின்னால் ء இடம்பெற்றால் அதற்கு المد المتصل என்று சொல்லப்படும். இதில் மத்தின் அளவு 5 அல்லது 6 ஹறகத்துக்கள் கட்டாயம் நிறுத்தும்போது 6 ஹறகத்துக்கள் கட்டாயம்.

உதாரணம்:- جَآءَ – سِيْٓءَ – سُوْٓءَ – اَنْبِيَآءُ

65. المد المنفصل என்றால் என்ன?

ஒரு கலிமாவின் கடைசியில் மத்துடைய ஹர்பும் அடுத்த கலிமாவின் ஆரம்பத்தில் ء உம் இடம்பெற்றால் அதற்கு المد المنفصل என்று சொல்லப்படும். இதில் மத்தின் அளவு 5 அல்லது 4 ஹறகத்துக்களாகும். 2 ஹறகத்துக்களுக்கும் நீட்ட முடியும்.

உதாரணம்:- يَآ اَيُّهَا النَّاسُ – قُوْٓا اَنْفُسَكُمْ

66. المد العارض للسكون என்றால் என்ன?

ஒரு கலிமாவின் கடைசியில் மத்துடைய ஹர்புக்கு பின்னால் வரும் எழுத்தை சுகூன் வைத்து நிறுத்தி ஓதுவதற்கு المد العارض للسكون என்று சொல்லப்படும். இதில் மத்தின் அளவு 6 அல்லது 4 அல்லது 2 ஹறகத்துக்களாகும்.

உதாரணம்:- اَلْعِقَابْ – مُفْلِحُوْنْ – مُسْتَقِيْمْ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67. المد البدل என்றால் என்ன?

ء க்குப்பின்னால் மத்துடைய ஹர்பு இடம்பெற்றால் அதற்கு المد البدل என்று சொல்லப்படும். இதில் மத்தின் அளவு 2 ஹறகத்துக்களாகும்.

உதாரணம்:- اٰدَمُ – اِيْمَانٌ – اُوْتِيَ

68. المد العوض என்றால் என்ன?

பத்ஹதைன் இடப்பட்ட ஒரு கலிமாவின் கடைசியில் அலிபு வைத்து நிறுத்துவதற்கு المد العوض என்று சொல்லப்படும். இதில் மத்தின் அளவு 2 ஹறகத்துக்களாகும்.

உதாரணம்:- حَكِيْمًا ஐ حَكِيْمَا என நிறுத்தவேண்டும்.

69. المد اللين என்றால் என்ன?

பத்ஹு செய்யப்பட்ட எழுத்துக்கு பின்னால் சுகூன் செய்யப்பட்ட و அல்லது ي இடம்பெற்று அதற்கு பின்னால் வரும் எழுத்தை சுகூன் வைத்து நிறுத்தி ஓதுவதற்கு المد اللين என்று சொல்லப்படும். இதில் மத்தின் அளவு 6 அல்லது 4 அல்லது 2 ஹறகத்துக்களாகும்.

உதாரணம்:- خَوْفْ – بَيْتْ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. المد الصلة என்றால் என்ன?

ழமீருடைய ة அல்லது ه ஐ மொழித்தலில் நீட்டி ஓதுவதற்கு சொல்லப்படும்.

71. المد الصلة க்கு நிபந்தனைகள் எத்தனை?

ة அல்லது ه க்கு முன்னால் சுகூனும், பின்னால் ஸத்தும் இடம்பெறாமல் இருக்கவேண்டும்.

72. المد الصلة எத்தனை வகைப்படும்? அவை எவை?

இரண்டு வகைப்படும்.

1வது المد الصلة صُغْرٰى

2வது المد الصلة كُبْرٰى

73. المد الصلة صغرى என்றால் என்ன?

ة அல்லது ه க்கு பின்னால் ء வராமல் வேறு எழுத்து வந்தால் المد الصلة صغرى என்று சொல்லப்படும். இதில் மத்தின் அளவு 2 ஹறகத்துக்களாகும்.

உதாரணம்:- لَهٗ مَافِى السَّمٰوَاتِ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74. المد الصلة كبرى என்றால் என்ன?

ه அல்லது ه க்கு பின்னால் ء இடம்பெற்றால் அதற்கு المد الصلة كبرى என்று சொல்லப்படும். இதில் மத்தின் அளவு 5 அல்லது 4 அல்லது ஹறகத்துக்களாகும். 2 ஹறகத்துக்களுக்கும் நீட்ட முடியும்.

உதாரணம்:- وَمِنْ عِلْمِهٖٓ اِلَّا بِمَا شَاءَ

75. المد الصلة இடம்பெறாமல் வந்ததற்கு உதாரணம் தருக.

لَدَيْهِ – عَلَيْهِ – مِنْهُ – وَلَهُ الدِّيْنُ

76. சட்டத்திற்கு மாற்றமாக المد الصلة இடம்பெற்ற திருமறை வசனம் எது?

فِيْهٖ مُهَانًا

77. المد الفرق என்றால் என்ன?

பத்ஹு செய்யப்பட்ட ء க்குப்பின்னால் அலிபும் அதற்குப் பின்னால் ஸத்தும் இடம்பெற்றால் அதற்கு المد الفرق என்று சொல்லப்படும். இதில் மத்தின் அளவு 6 ஹறகத்துக்கள் அவசியம்.

உதாரணம்:- آٰللّٰهُ خَيْرٌ – قُلْ آٰلذَّكَرَيْنِ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78. المد التمكين என்றால் என்ன?

ஷத்தும், கஸறத்தும் செய்யப்பட்ட ي க்குப்பின்னால் சுகூன் செய்யப்பட்ட ي இடம்பெற்றால் அதற்கு المد التمكين என்று சொல்லப்படும். மத்தின் அளவு 2 ஹறகத்துக்களாகும்.

உதாரணம்:- حُيِّيتُمْ – وَالنَّبِيِّينَ

79. المد اللازم الكلمى المثقل என்றால் என்ன?

المد اللازم الكلمى المثقل ஒரு கலிமாவில் மத்துடைய ஹர்புக்கு பின்னால் ஷத்து இடம்பெற்றால் அதற்கு المد اللازم الكلمى المثقل என்று சொல்லப்படும். இதில் மத்தின் அளவு 6 ஹறகத்துக்கள் அவசியம்.

உதாரணம்:- وَلَا الضَّالِّينَ – أَتُحَاجُّونِّي

80. المد اللازم الكلمى المخفف என்றால் என்ன?

ஒரே கலிமாவில் மத்துடைய ஹர்புக்கு பின்னால் சுகூன் இடம்பெற்றால் அதற்கு المد اللازم الكلمى المخفف என்று சொல்லப்படும். இதில் மத்தின் அளவு 6 ஹறகத்துக்கள் அவசியம்.

உதாரணம்:- آلْآنَ

81. اَلْحُرُوْفُ الْمُقَطَّعَةُ என்றால் என்ன?

சில ஸூறத்துடைய ஆரம்பத்தில் வரக்கூடிய தனித்து வாசிக்கக்கூடிய எழுத்துக்களுக்குச் சொல்லப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

82. الحروف المقطعة உடைய எழுத்துக்கள் எத்தனை?
அவைகளை உள்ளடக்கும் வாக்கியம் எது?

14

ص – ل – ه – س – ح – ي – ر – ا – م – ن – ق – ط – ع – ك

صِلْهُ سُحَيْرًا مَنْ قَطَعَكَ

83. الحروف المقطعة இல் மத்தியில் இடம்பெறாத எழுத்து எது?

அலிபு

84. المد اللازم الحرفى المخفف க்கும் المد اللازم الحرفى المثقل க்கும்
பொதுவான ஹர்புகள் எத்தனை? எவை? அவைகளை
உள்ளடக்கும் வாக்கியம் எது?

س – ن – ق – ص – ع – ل – م – ك

سَنَقُصُّ عِلْمَكَ

85. المد اللازم الحرفى المخفف க்கு மாத்திரம் சொந்தமான
ஹர்புகள் எத்தனை? எவை? அவைகளை உள்ளடக்கும்
வாக்கியம் எது?

5

ح – ي – ط – ه – ر

حَيٌّ طَهُرَ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

86. سنقص علمك இல் வரும் ஒவ்வொரு ஹர்புகளையும் உச்சரிக்கும் போது உச்சரிப்பில் எத்தனை ஹர்புகள் இடம்பெறும்? உச்சரித்துக்காட்டுக.

3

ع = عين ص = صاد ن = نون س = سين

ق = قاف ك = كاف م = ميم ل = لام

87. حي طهر இல் வரும் ஒவ்வொரு ஹர்புகளையும் உச்சரிக்கும் போது உச்சரிப்பில் எத்தனை ஹர்புகள் இடம்பெறும்? உச்சரித்துக்காட்டுக.

2

ر = را ه = ها ط = طا ي = يا ح = حا

88. المد اللازم الحرفى المثقل என்றால் என்ன?

உச்சரிப்பு மூன்று எழுத்துக்களைக்கொண்ட ஸூறத்துடைய ஆரம்பத்தில் வரக்கூடிய ஹர்புகளில் உச்சரிப்பில் மூன்றாம் எழுத்து அடுத்த எழுத்துடன் சேர்ந்து ஷத்து செய்யப்பட்டு வந்தால் அதற்கு المد اللازم الحرفى المثقل என்று சொல்லப்படும். இதில் மத்தின் அளவு 6 ஹறகத்துக்கள். அவசியம்.

உதாரணம்:- الٓمٓ - طسٓمٓ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

89. المد اللازم الحرفى المخفف என்றால் என்ன?

உச்சரிப்பு மூன்று எழுத்துக்களைக்கொண்ட ஸூறத்துடைய ஆரம்பத்தில் வரக்கூடிய ஹர்புகளில் உச்சரிப்பில் மூன்றாம் எழுத்து சுகூன் செய்யப்பட்டு வந்தால் அதற்கு المد اللازم الحرفى المخفف என்று சொல்லப்படும்.
இதில் மத்தின் அளவு 6 ஹறகத்துக்கள் அவசியம்.

உதாரணம்:- الٓمٓ – حٰمٓ – كٓهٰيٰعٓصٓ

90. المد اللازم الحرفى المخفف எத்தனை வகை? எவை?

இரண்டு வகைப்படும்.

**1வது :-**
உச்சரிப்பு 3 எழுத்துக்களைக்கொண்ட ஹர்பில் வருவது, இதில் மத்தின் அளவு 6 ஹறகத்துக்கள் அவசியம்.

உதாரணம்:- الٓمٓصٓ

**2வது :-**
உச்சரிப்பு 2 எழுத்துக்களைக்கொண்ட ஹர்பில் வருவது, இதில் மத்தின் அளவு 2 ஹறகத்துக்கள்.

உதாரணம்:- حٰمٓ – يٰسٓ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# وَقْفُ குறியீடுகள்.

1. 0 ஒரு ஆயத்து நிறைவு பெற்றதைக் குறிக்கும்.

2. م அவசியம் நிறுத்த வேண்டும். (وقف لازم)

3. ط நிறுத்தி ஓதுவது நல்லது. சேர்த்து ஓதுவது நல்ல தல்ல.

4. ج நிறுத்தியோ, நிறுத்தாமலோ ஓதலாம். நிறுத்தி ஓதுவது சிறந்தது. ( وقف جائز )

5. ز நிறுத்தியோ, சேர்த்தோ ஓதலாம். ஆயினும் சேர்த்து ஓதுவது சிறந்தது.

6. ص சேர்த்து ஓதலாம், எனினும் நிறுத்தி ஓதுவது அனுமதிக்கப்பட்டுள்ளது.

7. ق சேர்த்து ஓதுவது சிறப்பானது என்பது பெரும்பான்மையான கருத்து.

8. لا நிறுத்தக்கூடாது, அப்படி நிறுத்தவேண்டி ஏற்பட்டால் முந்தின தொடரோடு சேர்த்து வேண்டும்.

9. قف நிறுத்தி ஓதலாம்.

10. س மூச்சு விடாது சற்று தாமதித்து ஓதவேண்டும். (سكتة)

11. صل நிறுத்தி ஓதுவது சிறப்புடையது.

12. صلى சேர்த்து ஓதுவது சிறப்பானது.

13. قلى நிறுத்தி ஓதுவதுதான் மேலானது.

14. ك இதற்கு முன்னால் என்ன குறியீடு இருக்கின்றதோ அதையே பின்பற்றி ஓத வேண்டும்.

15. ∴ ∴ ஒரு இடத்தில் நின்றால் மற்ற இடத்தில் சேர்த்து ஓதவேண்டும். (معانقة)

16. لا ۵ நிறுத்தி ஓதலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

حفص கிறாஅத்தில் سَكْتَة உள்ள 4 இடங்கள்.

1. وَلَمْ يَجْعَلْ لَهُ عِوَجًا قَيِّمًا
2. وَقِيلَ مَنْ رَاقٍ
3. كَلَّا بَلْ رَانَ
4. مَنْ بَعَثَنَا مِنْ مَرْقَدِنَا هَذَا

س ஆக மாத்திரம் ஓதும் இடம்.

1. وَاللّٰهُ يَقْبِضُ وَيَبْصُطُ (سورة البقرة)
2. وَزَادَكُمْ فِى الْخَلْقِ بَصْطَةً (سورة الأعراف)

ص ஆக மாத்திரம் ஓதும் இடம்.

لَسْتَ عَلَيْهِمْ بِمُصَيْطِرٍ (سورة الغاشية)

س ஆக அல்லது ص ஆக மாத்திரம் ஓதும் இடம்.

اَمْ هُمُ الْمُصَيْطِرُوْنَ (سورة الطور)

<u>அஊது பிஸ்மியுடன் ஸூறத்தை ஓதும்போது ஆகுமான முறைகள்.</u>

1. எல்லாவற்றையும் நிறுத்தி ஓதுதல்.
2. எல்லாவற்றையும் சேர்த்து ஓதுதல்.
3. அஊதை மாத்திரம் பிஸ்மியுடன் சேர்த்து ஓதுதல்.
4. பிஸ்மியை மாத்திரம் ஸூறத்துடன் சேர்த்து ஓதுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு ஸூறத்துக்கிடையில் பிஸ்மி இடம்பெறும்போது ஆகுமான முறைகள் -3

1. எல்லாவற்றையும் நிறுத்தி ஓதுதல்.

2. எல்லாவற்றையும் சேர்த்து ஓதுதல்.

3. இரண்டாம் ஸூறத்தின் ஆரம்பத்தில் பிஸ்மியை சேர்த்தல்.

**இதில் ஆகாத முறை 1**

முந்தின ஸூறத்தின் கடைசியுடன் பிஸ்மியை சேர்த்து ஓதி நிறுத்திவிட்டு இரண்டாம் ஸூறத்தை ஓதுதல்.

**அல்குர்ஆன் ஓதும்போது ஏற்படும் தவறுகள் -2**

1வது اَللَّحْنُ الْخَفِيُّ ( மறைந்த தவறு )

2வது اَللَّحْنُ الْجَلِيُّ ( வெளிப்படையான தவறு )

اللحن الخفي :-

தஜ்வீத் சட்டங்களைக் கவனியாமல் ஓதுவது இதில் இடம்பெறும்.இத்தவறைச்செய்வது மக்ருஹ். ஹறாம் என்றும் சில இமாம்கள் கூறுகின்றனர்.

اللحن الجلي :-

இதில் பல விடயங்கள் இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஒரு எழுத்திற்கு பதிலாக வேறு எழுத்தை ஓதுவது

உதாரணம்:- الْحَمْدُ ஐ الْهَمْدُ என ஓதுதல்.

2. ஒரு எழுத்தை கூட்டி ஓதுவது.

உதாரணம்:- الْحَمْدُ ஐ الْحَمْدُوْ என ஓதுதல்.

3, ஒரு எழுத்தை குறைத்து ஓதுவது.

உதாரணம்:- اَنْ طَهِّرَا ஐ اَنْ طَهِّرَ என ஓதுதல்.

4. ஹறகத்துக்குப்பதிலாக சுகூன் வைத்து ஓதுவது.

உதாரணம்:- صُحُفٌ ஐ صُحْفٌ என ஓதுதல்.

5. ஷத்தைக் கவனியாமல் லேசாக ஓதுவது.

உதாரணம்:- يَدُعُّ الْيَتِيْمَ ஐ يَدُعُ الْيَتِيْمَ என ஓதுதல்.

الحن الجلي ஆன தவறுகளை செய்வது ஹறாம் என எல்லோரும் கூறுகின்றனர். அப்படி ஓதும்போது குர்ஆன் சபிக்கும்.

<u>தஜ்வீத் பற்றிய மார்க்க சட்டம்.</u>

தஜ்வீத் சட்டம் படிப்பது فرض كِفَايَة

தஜ்வீத் முறைப்படி ஓதுவது فرض عَيْنٌ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தஜ்வீத் பற்றிய மணிமொழிகள்.

قال الله تعالى : وَرَتِّلِ الْقُرْاٰنَ تَرْتِيْلًا

அல்லாஹு தஆலா திருவுளமானான்: அல்குர்ஆனை தஜ்வீத் முறைப்படி ஒழுங்காக ஓதுவீராக.

قال النبى صلى الله عليه وسلم رُبَّ قَارِئٍ يَقْرَأُ الْقُرْاٰنَ وَالْقُرْاٰنُ يَلْعَنُهُ

சிலர் குர்ஆனை ஓதுகின்றனர், ஆனால் குர்ஆன் அவர்களைச் சபிக்கின்றது.

## குர்ஆன் ஓதும்போது ஓதக்கூடிய சில துஆக்கள்.

1. سورة النصر ஓதி முடித்த பின் ஓதக்கூடியது.

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهٖ اَسْتَغْفِرُ اللهَ وَاَتُوْبُ اِلَيْهِ

2. سورة التين ஓதி முடித்த பின் ஓதக்கூடியது.

بَلٰى وَاَنَا عَلٰى ذٰلِكَ مِنَ الشَّاهِدِيْنَ وَالشَّاكِرِيْنَ وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ

3. سورة الغاشية ஒநி முடித்த பின் ஓதக்கூடியது.

اَللّٰهُمَّ يَسِّرْ عَلَيْنَا حِسَابَنَا

4. رحمة உடைய اية ஓதும்போது ஓதக்கூடியது.

اَللّٰهُمَّ اَدْخِلْنِىْ فِىْ رَحْمَتِكَ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. عَذَابٌ உடைய اٰيَةٌ ஓதும்போது ஓதக்கூடியது.

اَللّٰهُمَّ اَعِذْنِىْ مِنْ عَذَابِكَ

6. سورة المُلْك ஓதி முடித்த பின் ஓதக்கூடியது.

اَللّٰهُ رَبُّ الْعَالَمِيْنَ

7. فَبِاَيِّ اٰلَاءِ رَبِّكُمَا تُكَذِّبَانِ என்று ஓதுவதைக் கேட்பவர் கூறுவது.

لَا بِشَيْئٍ مِنْ نِعَمِكَ رَبَّنَا نُكَذِّبُ فَلَكَ الْحَمْدُ

8. سَجْدَةَ التِّلَاوَةِ இல் ஓதுவது.

سَجَدَ وَجْهِىْ لِلَّذِىْ خَلَقَهُ وَصَوَّرَهُ وَشَقَّ سَمْعَهُ وَبَصَرَهُ بِحَوْلِهِ وَقُوَّتِهِ
فَتَبَارَكَ اللّٰهُ اَحْسَنُ الْخَالِقِيْنَ

9. سجدة التلاوة இன் நிய்யத்து

اَسْجُدُ سَجْدَةَ التِّلَاوَةِ لِلّٰهِ تَعَالٰى اَللّٰهُ اَكْبَرُ

குறிப்பு:- سجدة التلاوة என்றால் அல்குர்ஆன் ஓதும்போது ஸஜதாவுடைய ஆயத்து வந்தால் ஸுஜூது செய்வதைக்குறிக்கும். தொழுகையில் ஈடுபடாமல் ஓதக்கூடியவர் மேற்கூறிய நிய்யத்தைக் கூறி தக்பீர் கட்ட வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தஜ்வீத் குறியீடுகள்.

1. الاخفاء :- நூனுக்கு சுகூன் குறி வைக்கப்படாமல் இருப்பதும் ـً ـٍ உடைய இரு குறிகளும் ஒன்றில் கீழ் மற்றையது அகன்று வருவதும் ـٌ உடைய குறி புரண்டு வராமல் ஒன்றின் பின் மற்றையது வருவதும் இதன் அடையாளமாகும்.

உதாரணம் :- مِن تَحْتِهَا - نَارًا تَلَظَّىٰ - يَوْمَئِذٍ تُحَدِّثُ - حَيَّةٌ تَسْعَىٰ

2. الاظهار :- நூனுக்கு சுகூன் குறி வைக்கப்பட்டு வருவதும் உடைய இரு குறிகளும் ஒன்றில் கீழ் மற்றையது நேருக்கு நேராக வருவதும் இல் உள்ள ஒரு ழும்மு புரண்டு வருவதும் இதன் அடையாளமாகும்.

உதாரணம் :- مِنْ أَهْلِ - كُفُوًا أَحَدٌ - حَاسِدٍ إِذَا - رَسُولٌ أَمِينٌ

3. الادغام :- நூனுக்கு சுகூன் குறி இல்லாமல் இருப்பதும் உடைய இரு குறிகளும் ஒன்றின் கீழ் மற்றையது அகன்று வருவதும் உடைய குறி புரண்டு வராமல் வருவதும் ل - ر - ن - م ஸத்து செய்யப்பட்டும் و - ي ஸத்து செய்யப்படாமல் வருவதும் அடையாளமாகும். இந்த ஒழுங்கின்படி الادغام பின்வருமாறு அமையும்.

م - ن - ر - ل - ادغام كَامِلٌ

و - ي - ادغام نَاقِص

உதாரணம் :-

مِن مَّعْرُوفٍ - رَاضِيَةً مَّرْضِيَّةً

خَيْرٌ مِّنْ - مِن وَلِيٍّ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. الاقلاب :- சுகூன் குறி இல்லாமல் நூனுக்கு மேல் சிறு م எழுதப்பட்டு வருவதும் தன்வீனின் இரு குறிகளின் ஒரு குறிக்கு மேல் சிறு م எழுதப்பட்டு வருவதும் இதன் அடையாளமாகும்.

உதாரணம் :- مِنۢ بَعْدِ – أَبَدًۢا بِمَا – كُلُّ نَفْسٍۭ بِمَا – صُمٌّۢ بُكْمٌ

5. ادغام المتجانسين – ادغام المتماثلين – ادغام المتقاربين ஆகிய மூன்றிலும் முதலாவது எழுத்துக்கு சுகூன் குறி வைக்கப்படாமலும் இரண்டாவது எழுத்து ஸத்து செய்யப்பட்டு வருவதும் இதன் அடையாளமாகும்.

உதாரணம் :- اِذْهَب بِّكِتَابِى هٰذَا – وَجَدتُّ – وَقُل رَّبِّ

6. ادغام الميم :- முதலாவது م க்கு சுகூன் குறி வைக்கப்படாமலும் இரண்டாவது م க்கு ஸத்து வருவதும் இதன் அடையாளமாகும்.

உதாரணம் :- عَلَيْهِم مُّؤْصَدَةٌ

7. اخفاء الميم :- م க்கு சுகூன் குறி வைக்கப்படாமல் வரும்.

உதாரணம் :- تَرْمِيهِم بِحِجَارَةٍ

8. اظهار الميم:- م க்கு சுகூன் குறி வைக்கப்படட்டு வரும்.

உதாரணம் :- اَلَمْ تَرَ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. அலிபு இரு வகைப்படும்.

1வது اَلِفُ الْقَطْعِ நிரந்தரமாக தரிபடும் அலிபுக்கு சொல்லிப்படும்.

உதாரணம் :- أَنْعَمْتَ – أُعِدَّتْ – إِخْوَةٌ

2வது اَلِفُ الْوَصْلِ சேர்த்து ஓதும்போது விழும் அலிபுக்கு சொல்லப்படும்.

உதாரணம் :- اَلْحَمْدُ – اَلرَّحْمٰنُ

10. உச்சரிப்பில் வராத அலிபுக்கு வட்டம் இருக்கும்.

உதாரணம் :- إِذْ دَخَلُوا۟ - لِشَا۟ىْءٍ

11. சேர்த்து ஓதும்போது விழுந்தும். நிறுத்தும் போது தரிபடும் அலிபுக்கு வட்டம் உயர்ந்து வரும்.

உதாரணம் :- أَنَا۠ – قَوَارِيرَا۠

12. பத்ஹு செய்யப்பட்ட எழுத்தை நீட்டுவதற்கு வரும் சிறு அலிபு.

உதாரணம் :- مٰلِكِ – إِلٰهٌ

13. பத்ஹு செய்யப்பட்ட ء ஐ நீட்டுவதற்கு வரும் அலிபு.

உதாரணம் :- ءَامَنَ – قُرْءَانٌ – وَلَلْءَاخِرَةُ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. உச்சரிப்பில் வராத و க்கு மேல் வரும் சிறு அலிபு.

உதாரணம் :- صَلٰوةٌ – زَكٰوةٌ – مِشْكٰوةٌ

15. உச்சரிப்பில் வராத ى க்கு மேல் வரும் சிறு அலிபு.

உதாரணம் :- سَيَصْلٰى – وَالضُّحٰى

16. مد صلة இல் ٗ க்குப் பின்னால் சிறு و உம் ٖ க்குப் பின்னால் சிறு ى உம் எழுதப்பட வேண்டும்.

உதாரணம் :- إِنَّهٗ كَانَ – فَأَثَرْنَ بِهٖ نَقْعًا

17. 'ரே' என்று இமாலாவுடன் ஓதுவதற்கு உதாரணம்.

بِسْمِ اللّٰهِ مَجْرٖيهَا ( சாய்த்து ஓதல் إِمَالَة )

இதில் 'ரி' என்றோ 'ரா' என்றோ ஓதக்கூடாது.

18. إِشْمَام செய்வதற்கு உதாரணம்.

مَا لَكَ لَا تَأْمَنَّا

إِشْمَام (சுவைத்தல்) என்றால் ழம்மை மொழிவது போல் நடித்தல். ஆனால் ழம்மின் சத்தம் வெளியே வராமல் ஓத வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. تَسْهِيلْ செய்வதற்கு உதாரணம்.

ءَاْعْجَمِيٌّ وَعَرَبِيٌّ

தஸ்ஹீல் என்றால் இலேசாக்கல், இரண்டாவது ஹம்ஸை சுகூனுக்கும் மத்துக்கும் இடைப்பட்ட மாதிரி ஓதவேண்டும்.

20. பத்ஹதைன், கஸ்றதைன், ழும்மதைனுக்குப் பிறகு வரும் வஸ்லுடைய அலிபுடன் சேர்த்து ஓதும்போது கசறு செய்யப்பட்ட நூனாகப் புரட்டி ஓத வேண்டும்.

உதாரணம் :- لَهْوًا انْفَضُّوا (لَهْوَنِ انْفَضُّوا)

21. மத்து வாஜிப், மத்து லாஸிம் ~

22. மத்து ஜாயிஸ் ~

ﷲ என்ற சொல்லில் ل க்கு முந்திய எழுத்துக்கு பத்ஹு அல்லது ழம்மு வரும்போது ل ஐ கனமாகவும் ( الله تعظيم என தஜ்வீத் சட்டம் சொல்ல வேண்டும் ) ل க்கு முந்திய. ( ترقيق اللام என தஜ்வீத் சட்டம் சொல்ல வேண்டும்) மொழிய வேண்டும்.

உதாரணம் :- هُوَاللّٰهُ – نَارُ اللّٰهِ – بِاللّٰهِ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. اللّٰه என்ற சொல்லில் ل க்கு இடப்பட்ட பத்ஹத்துக்குப் பின்னால் சிறு அலிபு எழுதப்படமாட்டாது ஏனெனில் اللّٰه எனும் திருநாமம் اَللَّاتُ என்ற சிலைக்கு எழுத்தில் கூட நிகராக இருக்க கூடாது என்பதற்காக.

25. வஸ்லுடைய அலிபை ஆரம்பித்து வாசிக்கும் போது சொல்லின் 3ம் எழுத்துக்கு ழம்மத்து இருந்தால் ழம்மத்தும் 3ம் எழுத்துக்கு பத்ஹத்து அல்லது கஸ்றத்து இருந்தால் கஸ்றத்தும் வைத்து வஸ்லுடைய அலிபை வாசிக்க வேண்டும்.

உதாரணம் :- اُدْخُلْ - اِعْلَمْ - اِضْرِبْ


சில சமயம் மாற்றமாகவும் வரும்.

உதாரணம் :- اِبْنُكَ - اِسْمُكَ

(முற்றும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# KALUTARA GRAND MOSQUE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org